Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No.CC.No.39/2015
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 11

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜேந்திரன் | Calling: | காவல் ஆய்வாளர் |
| Father's Name: | கணேசன் | Religion: | |
| Village: | கரம்பக்குடி | Age: | 56 |
| Taluk: | கரம்பக்குடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 17.02.2026 நேரம் : 02.50 PM

( 3 மற்றும் 5 எதிரிகள் ஆஜர்.2 ம் எதிரி இறந்துவிட்டார். 1,4,6,7 ம் எதிரிகள் ஆஜரில்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது)

அ.சா. 11 முதன்மை விசாரணை

நான் தற்போது கரம்பக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 05.10.2012 ம் தேதி வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து தபால் மூலம் வரப்பெற்ற புகாரினை பெற்று சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சம்பத் அவர்கள் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய குற்ற எண். 649/2012 சட்டப்பிரிவுகள் 147,148,427,451,380,506(2) இதச படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.10.2012 ம் தேதி 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கர், குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைப்படம் தயார்

செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் முறையே அ.த.சா.ஆ 3 ஆகவும் அ.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் அண்ணாமலை, ராமகிருஷ்ணன், நடராஜன், ரத்தினம், பாண்டியன், மணி, சீனிவாசன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 29.11.2012 ம் தேதி மாலை 17.00 மணிக்கு எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் படி முன்ஜாமின் பெற்று வாணியம்பாடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். ஆகவே எதிரிகளை கைது செய்யஇயலவில்லை.2 ம் எதிரி ராஜேந்திரன் இறந்துவிட்டார். 23.03.2013 ம் தேதி விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 147,148,392,452,506(2) உடன் இணைந்த பிரிவு 149 இதச படிக்கு குற்ற அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) யில் உள்ளது போல் தான் சொன்னார்கள். ப.சா.5 பாண்டியன் எனது விசாரணையில் செட்டியப்பனூர் கிராம எல்லையில் உள்ள பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்கத்தின் செயலாளராக இருந்து வருவதாகவும் மேற்படி பெட்ரோல் பங்கை ராமகிருஷ்ணன் என்பவரிடம் காசோலைகள்மூலமாக ரூ.5 லட்சம் பணமும், அண்ணாமலை மூலமாக ரூ.3 லட்சம் பணமும் ஆக மொத்தம் ரூ.8 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு பெட்ரோல் பங்கை நடத்திக்கொள்ளும்படி அண்ணாமலை, ராமகிருஷ்ணன், ரத்தினம் நடத்தி வந்ததாகவும் 22.10.2010 மாலை 02.00 மணிக்கு பொதுக்குழு கூட்டத்திற்கு செல்லும் போது எதிரிகள் ஏகாம்பரம், ராஜேந்திரன், சரவணன், உதயகுமார், ஈஸ்வரன், சுந்தரமூர்த்தி, ரஜீனி ஆகியோர்கள் ஒன்றுக்கூடி பெட்ரோல் பங்கினை அண்ணாமலைக்கு நடத்த அக்ரீமண்ட் போட்டுக்கொடுக்க நீங்கள் யார் என்று தகராறு செய்து கைகளால் அடித்தும் சட்டைகளை பிடித்து கிழித்தும் கலகம் செய்துவிட்டு அங்கிருந்து மாலை 05.00 மணிக்கு பெட்ரோல் பங்கிற்கு சென்று அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பொருட்களையும் பெட்ரோல் பங்க் கண்ணாடிகள், மேசை, நாற்காலிகளை அடித்து சேதம் ஏற்படுத்திவிட்டு அன்று வசூல் செய்து வைத்திருந்த பணம் ரூ.1,27,000 த்தை ஏகாம்பரம்,சரவணன், ரஜீனிகாந்த் மூவரும் கொள்ளையடித்து சென்று ராஜேந்திரன், உதயகுமார் ஆகியோர்கள் பெட்ரோல் பங்கின் சாவியை எடுத்துக்கொண்டார். அண்ணாமலை, ராமகிருஷ்ணன், ரத்தினம் ஆகியோர்களை அங்கிருந்த பெட்ரோல் பங்க் ஊழியர்களிடம் தேவடியா பசங்களே இவர்களை யார்

உள்ளே விட்டது என்று மிரட்டியும் மரியாதையாக போய்விடுங்கள் இல்லாவிட்டால் பெட்ரோல் பங்க்கை தீ வைத்து கொளுத்திவிடுவோம் என்று ஈஸ்வரனும் சுந்தர மூர்த்தியும் மிரட்டியும் உங்களை உயிரோடு கொளுத்திவிடுவோம் என்றும் , உங்கள் சாவு எங்கள் கையில் தான் என்று மிரட்டியதாகவும் பெட்ரோல் பங்கில் வைத்திருந்த ரூ.4 லட்சம் மதிப்புள்ள பெட்ரோலையும் ரூ. 4 லட்சம் மதிப்புள்ள டீசலையும் கொள்ளையடித்து சென்று விட்டார்கள் என்றும் கூறினார். தடுக்க வந்த அண்ணாமலை, ராமகிருஷ்ணன் , ரத்தினம் ஆகியவர்களை உயிரோடு கொளுத்திவிடுவோம் என்று மிரட்டியதாகவும் கூறினார்கள். நடந்ததை யாரிடமாவது சொன்னால் உங்களை உயிரோடு விடமாட்டேன் என்று ராஜேந்திரனும், உதயகுமாரும் மிரட்டினார்கள். பின்னர் இது சம்மந்தமாக புகார் கொடுத்தாக சொன்னார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் தரப்பில் எங்கள் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளார்களா என்றால் நகர காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார்கள், கிராமிய காவல் நிலையத்தில் ஏதும் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்த இடம் நகர காவல்நிலையத்திற்கு உட்பட்ட இடமா அல்லது கிராமிய காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடமா என்றால் கிராமிய காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடம். அப்படியானால் நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்தற்கான காரணத்தை விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் எந்த காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்ற தகவல் தெரியவில்லை என்று கூறினார்கள். நகர காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை எங்கள் காவல்நிலையத்திற்கு அனுப்பினார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் ஒரு தனிப்புகார் தாக்கல் செய்ததில் நான் சமர்பித்த அறிக்கையில் மேற்கூறிய விவரங்களை கூறியுள்ளேனா என்றால் இல்லை. அந்த தனிப்புகாரில் எத்தனை சாட்சிகளை புகார் தாரர் தரப்பில் விசாரிக்க சேர்க்கப்பட்டுள்ளது என்றால் 4 சாட்சிகள். தனிப்புகாரில் நான்கு சாட்சிகளை விசாரித்துவிட்டு, எனது அறிக்கையில் 9 சாட்சிகளை விசாரித்தற்கான காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் சம்பவயிடத்தில் சாட்சிகள் முன்வந்ததால் 9 சாட்சிகளை விசாரித்தேன். 9 சாட்சிகளும் பெட்ரோல் பங்கின் பங்குதாரர்களா, புகார் தாரருக்கு வேண்டப்பட்டவர்களா என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன், சாட்சிகள் பெட்ரோல் பங்கில் வேலை செய்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், பெட்ரோல் பங்கின் பங்குதாரர்கள் ஆவார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பங்கில் வேலை செய்தவர்கள்

யாராவது புகார் அளித்துள்ளார்களா என்றால் பங்குதாரர் அண்ணாமலை புகார் அளித்துள்ளார். அண்ணாமலை பங்குதாரர் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. அன்றைய தேதியில் பெட்ரோல் பங்கின் உண்மையான பங்குதாரர்கள் யார் என்ற விவரத்தையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அண்ணாமலை தான் பங்குதாரர் என்று அக்ரீமண்ட் உள்ளதால் வழக்கில் அதைப்பற்றி கூறவில்லை. அதற்காவது ஆவணங்களை ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆவணங்களை சரிபார்த்து தாக்கல் செய்திருந்தால் தான் இந்த வழக்கில் அண்ணாமலை தான் பங்குதாரர் என்று தெரியவரும் என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் விஜய், எழிலரசன் ஆகியோர்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு வாய்மொழியாக குத்தகைக்கு விட்டதாக கூறியிருக்கும் நிலையில் மேற்படி நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சியாக சேர்த்துள்ளீர்களா என்றால் இல்லை. குறைந்தபட்சம் அவர்களுக்கு எவ்வளவு ரூபாய்க்கு குத்தகைக்கு விடப்பட்டது என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. யார் யாருக்கு குத்தகைக்கு விடப்பட்டது என்ற விவரத்தை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.பெட்ரோல் பங்கு சேதப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் அதன் புகைப்படம் மற்றும் எடுத்து செல்லப்பட்டதாக சொல்லப்படும் பணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சம்பவம் நடந்து இரண்டு வருடங்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால் தாக்கல் செய்யவில்லை. அந்த புகைப்படம் மற்றும் கைப்பற்றிய பணம் இருந்தால் தான் பிரிவுகள் 392,380 வரும் என்றால் சரிதான். பங்கின் பங்குதாரர் மற்றும் உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய பதிவேடு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அண்ணாமலை , ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் பணம் கொடுத்து பங்க்கை குத்தகைக்கு எடுத்து நடத்திவந்ததாக கூறியிருக்கும் நிலையில் அதுக்குறித்து ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் சரிபார்த்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அண்ணாமலை , ராமகிருஷ்ணன் மற்றும் ரத்தினம் ஆகியோர்கள் பங்க்கை நடத்தி வந்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களை பார்த்தால் தான் மேற்கூறிய நபர்கள் பங்க்கை நடத்தி வந்தார்களா என்பது பற்றி தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தனியாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அண்ணாமலை , ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் காசோலை மோசடி வழக்கு

மற்றும் சிவில் வழக்கு தாக்கல் செய்ததில் அவர்களுக்கு எதிராக அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது பற்றி விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியான ரத்தினம் மற்றும் நடராஜன் ஆகியோர்கள் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என சாட்சியம் அளித்துள்ள நிலையில் தங்கள் விசாரணையில் அதுக்குறித்து ஏதேனும் கூறியுள்ளார்களா என்றால் அதுக்குறித்து தெரியாது. மகசர் சாட்சிகளான சங்கர் மற்றும் குணசேகரன் என்பவர்கள் தனது சாட்சியத்தில் வழக்கு குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதின் பேரில் வெள்ளை தாளில் கையொப்பம் செய்தோம் என்றும் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அன்றைய தினத்தில் பெட்ரோல் பங்கிற்கு யார் தலைவர், யார் செயலாளர், யார் பொருளாளர், யார்யார் உறுப்பினர்கள், யார் யார் பங்குதாரர்கள் என்பதற்கு போதியமான ஆவணங்களை நீங்கள் சரிபார்த்து இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறிய 9 சாட்சிகளும் புகார்தாருக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மையானால் அங்கு வேலை செய்த பங்க் ஊழியர்களையும் பொது மக்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. சங்க உறுப்பினர்களையும் விசாரித்து வாக்குமூலம் எதும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு புகார்தாரரால் முழுக்க முழுக்க காழ்ப்புணர்ச்சியால் கொடுக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இரண்டு வருடம் காலதாமதமாக வழக்கு பதிவு செய்திருப்பதற்கு சிறப்பு காரணம் ஏதாவது குறிப்பிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு முழுக்க முழுக்க புகார்தாரரின் செல்வாக்கை வைத்து தாக்கல் செய்த பொய்புகார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்திருந்தால் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரித்திருப்பேன் என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்திலே வைத்து தாயரித்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் இருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. சம்பவம் ஏதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராஜேந்திரன்

(இன்று இந்த வழக்கு கோப்பை விசாரணை எடுத்த போது சாட்சியான காவல் ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் காலை 11.30 மணியில் இருந்து 11.45 மணிக்குள் விடியோ பதிவின் மூலம் சாட்சியம் அளிக்க வந்த போது அவரின் மீது CC 134/2013 என்ற வழக்கில் வழக்கிறஞர் ஒருவர் புகார் கொடுத்து அது தனிப்புகாராக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைப்பெற்று வந்த நிலையில் அவர் மீது அந்த தனிநபர் வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் CC 39/2015 வழக்கில் இன்று விசாரணைக்காக இணைய வழி விடியோ பதிவில் சாட்சியம் அளிக்க ஆஜரான சாட்சியை விசாரிக்ககூடாது என்றும் அந்த வழக்கில் பிடியாணை இருப்பதால் இந்த வழக்கில் சாட்சியை விசாரிக்க ஆட்சேபனையும் வழக்கிறஞர் திரு. ஏசு, திரு.ராஜீ மற்றும் சில வழக்கறிஞர்கள் ஆட்சேபனை தெரிவித்ததாலும் விசாரிக்ககூடாது என்று நீதிமன்ற நடவடிக்கையில் குறுக்கிட்டதாலும் அதில் ஒரு வழக்கறிஞர் வீடியோ பதிவின் மூலம் சாட்சிகளை விசாரணை செய்யும் போது அதன் மூலம் பிடியாணையை நிறைவேற்ற முடியாத என்று கேள்விக்கேட்டார். ஆனால் அதுப்போன்ற விதி எதுவும் இணையவழி மூலம் செய்யமுடியாது என்றும் மேலும் பிடியாணையை நிறைவேற்றுவது நீதிமன்றத்திற்கு முன்பு நேரில் ஆஜர்படுத்தினால் மட்டுமே செய்யமுடியும் என்பதால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறப்பட்டது. அதன் பிறகு இந்த வழக்கு விசாரணைக்கு Pass over நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு வழக்கிறஞர்களின் சங்க தலைவர் திரு. ஏசு என்பவரால் மேற்படி தனிப்புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியநிலையில் பிறகு வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்த போது குறுக்கு விசாரணையின் போது வழக்கறிஞர் கேட்கும் கேள்விக்கு சாட்சி நினைவில்லை என்று பதில் கூறியதாலும் மேலும் ஆஜர் எதிரி சரவணன் அவர் தரப்பில் வழக்கறிஞர் கேட்கும் கேள்விக்கு அவர் தரப்பில் ஆட்சேபனை இருக்கிறது என்று கூறியதால் சிறிது சலசலப்பு ஏற்பட்டு மீண்டும் எதிரிக்கு வழக்கறிஞர் கேட்கும் கேள்விக்கு இடையூறு செய்யாமல் இருக்கும் படி அறிவுறுத்தியபின் மீண்டும் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்டது. )

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.18 09:28:36 +0530